1973 மார்ச் 30]

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடி விற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 5 of 1973), as passed by the Assembly, be passed".

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு, குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/73) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ் நாடு, 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/73)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 30

ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இச்சட்ட வரைவை முன்னுரைக்கையில், நகராட்சிகளில் உள்ள இரட்டை உறுப்பினர் வார்டுகளை நீக்கிவிடவும், அரிசனங்கள், பழங்குடியினர், மற்றும் பெண்டிருக்காகத் தொகுதிகள் ஒதுக்கவும் வகை செய்யும் முறையில் தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (தமிழ்நாடு சட்டம் எண் 5/1920) சட்டத்தைத் திருத்த இச்சட்ட வரைவு விழைகிறது என்பதைக் கூறிக்கொள் கிறேன். தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 5/1920) 43-வது பிரிவின் கீழ் நகராட்சிகளில் இரட்டை உறுப்பினர்கள் வார்டுகள் உள்ளதை மதிப் பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மூநிலச் சட்டமன்றங்களைப் பொறுத்தவரையில், சட்டமன்றப் பேரவை இரட்டை உறுப்பினர் தொகுதிகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக ஓர் உறுப்பினர் தொகுதிகளை ஏற்படுத்துவதற்கு 1961 ஆம் ஆண்டு இரட்டை உறுப்பினர் தொகுதிகள் நீக்கிவிடுதல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் எண் 1/1961) 3-வது பிரிவு வகை செய்கிறது என்பதை இது தொடர் பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதைப் போலவே, தற்போதுள்ள இரட்டை உறுப்பினர் வார்டு களை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றவும், எந்த வார்டு ரிசர்வ் வார்டாக இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கவும் வகை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் தற்பொழுதுள்ள இரட்டை உறுப்பினர்கள் வார்டுகளை நீக்கி விட்டு ரிசர்வ் இடங்களுக்காகவும், பெண்டிருக்காக வும் தனித் தேர்தல் வார்டுகளை ஏற்படுத்துமாறு சில நகராட்சி மன்றங்களும், இப்பொழுது அரசைக் கேட்டுக்கொண்டுள்ளன.

நகராட்சி மன்றங்களுக்கான அடுத்த சாதாரணத் தேர்தல்கள் 1974 ஏப்ரல் இறுதியில் நடக்கவிருக்கின்றன. வார்டுகள் பிரிப்பது தொடர்பாக பல்வேறு நகராட்சி மன்றங்களின் செயற்குறிப்புகள் வரப்பெற்று, அவை இப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, ஓர் உறுப்பினர் வார்டுகள் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு

@ 672-674-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நகராட்சி வார்டுகளின் எல்லைகளை வரையறுக்க அரசு இப்பொழுதே நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே நகராட்சிகளின் இரட்டை உறுப்பினர் வார்டுகளை நீக்கிவிடவும், நகராட்சி வார்டுகளின் எல்லைகளை வரையறுப்பது பற்றிய அரசின் செயற்குறிப்புகள் தொடர்பாக முறையீடுகள் செய்து கொள்ள பொது மக்களுக்கு வாய்ப்பு அளிக்க வகை செய்யவும், தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு 5-வது சட்டத்தின் 43-வது பிரிவைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

ஒரு நகராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் தான் எந்த வார்டின் உறுப்பினராய் இருக்க விரும்புகிறார் என்பதைத் தெரியப்படுத்தவும், அதனால் பிற வார்டுகளில் ஏற்படும் காலியிடங்களுக்குப் புதிய தேர்தல்கள் நடத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சித் தேர்தல்களில், ஆங்கிலோ இந்தியர்கள், அரிசனங்கள், பெண்டிர் ஆகியோருக்கு இடங்கள் ஒதுக்குவதற்கு விதித் துறை உள்ளதென்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நகராட்சி நிர்வாகத்தை மாற்றியமைப்பதற்காக 1949-ல் அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழு செய்த ஏனைய பரிவுரைகளோடு, வகுப்பு வேறுபாடுகள் ஒழிக்கப்பட்டுவிட்டதால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோரைத் தவிர வேறு எந்த வகுப்பினருக்காகவும் தேர்தல்களில் இடம் ஒதுக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதியது.

1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் எண் 4/1919) 5-வது பிரிவில் கூறியுள்ளவாறு மதத்தின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவது, இந்திய அரசியலமைப்பின் 14-வது பிரிவின் விதித் துறைகளுக்கு முரணானது என்று சென்னை உயர்நீதி மன்றமும் தீர்ப்பளித்துள்ளது. எனவே 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 4/1919) மதத்தின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவது தொடர்பான விதித் துறை விட்டுவிடப்பட்டது. மேற்சொன்னவற்றால் ஆங்கிலோ இந்தியர்களுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பான தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) விதித்துறைகளை விட்டுவிடுவதென்று 1961 ஆம்

ஆண்டிலும், மீண்டும் 1966-லும் கருதப்பட்டது. ஆனால் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. மேற்சொன்ன விதித் துறையை நீக்க இப்போது வாய்ப்பு கிட்டியுள்ளது. அரிசனங்களுக்கும், பெண்டிருக்கும் இடங்கள் ஒதுக்குவதற்கு ஏற்கெனவே வகை செய்யப்பட்டிருப்பதைத் தவிர, பழங்குடியினர்களுக்கும் இடங்கள் ஒதுக்குவதற்கான விதித் துறையைச் சேர்த்துக்கொள்ளக் கருதப்படுகிறது.

இவைகூறி, இப் பிரேரணையை இம்மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

5-50 பி.ப. "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இரட்டை மெம்பர் தொகுதிகளை எல்லாம் ஒற்றை மெம்பர் தொகுதிகளாகப் பிரிக்கவேண்டும் என்பது கொள்கைபற்றிய விஷயம். ஏற்கெனவே இருந்த குறைகளைப் போக்குவதற்கு வந்த ஒரு மசோதா என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். ஆகவே இதில் குறிப்பிட்டுப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. பேசினால் ஆதரித்துத்தான் பேச வேண்டும். ஆகவே ஆதரித்துப் பேசியதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

5- மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and other Papers

£123. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973), as passed by the Assembly.

£124. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973 (L.A. Bill No. 10 of 1973), as passed by the Assembly.

£ Laid on the Table of the House on 29th March 1973